# தீவுப்பகுதி மக்கள் முற்றாக வெளியேற்றம்


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 சித்திரை 15 ஷவ்வால் 12 இதழ்: 77

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 28-04-1991


(யாழ்ப்பாணம்)
நேற்று அதிகாலை முதல் மாலை வரை காரம்பன், நாரந்தனை, புளியங்கூடல் சரவணை வேலணை, சோளாவத்தை, சாட்டி, சுருவில் அராலிச்சந்தி, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு புங்குடுதீவு மக்கள் யாழ்ப்பாணம் நோக்கி கடல் வழியாகவும் வள்ளங்களிலும், கால்நடையாக வந்தவண்ண

(4-ம் பக்கம் பார்க்க)

## புளியங்கூடல் சந்தியில் இராணுவம் நிலைகொண்டது

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் 6 வகனங்களில் வெளியேறி புளியங்கூடல் சந்திவரை வந்து நிலைகொண்டுள்ளனர்.
நேற்று காலை 6 மணியளவில் படையினர் சுருவில்

(4-ம் பக்கம் பார்க்க)

## அகதியாக வந்தவர் அதிர்ச்சியால் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நோக்கி அகதியாகக் கால்நடையாகப் புறப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் மேலே ஹெலிச்சூட்டிற்கு மத்தியில் வந்தபோது அதிர்ச்சியினால் மரணமானார்.
இச்சம்பவம் மண்டைதீவுச் சந்தியில் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.
சரவணை 8-ம் கட்டையில்

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ பல முனைகளாலும் யாழ். குடாநோக்கி முன்னேற இராணுவம் அதிதீவிர முயற்சி

[கொழும்பு]
யாழ். குடா நோக்கி முன்னேற படையினர் அதிதீவிர முயற்சியில் ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம்காட்டி ஏஜென்ஸி செய்திகள் நேற்று தெரிவித்தன. வவுனியாவில் மேலதிகமாக படையினர் குவிக்கப்பட்டும் வருகிறார்களாம்.

வவுனியா, ஆனையிறவு கடும் மோதல் இடம்பெற்றுள் முகாம் பகுதிகளில் நேற்று வது. ஆனையிறவு முகாமிலிருந்து விமானப்படையின் உதவியுடன் முன்னேற முற்பட்ட படையினர் மீது புலிகள் உக்கிர தாக்குதலை மேற்கொண்டதையடுத்து படையினர் பலத்த இழப்புடன் பின்வாங்கினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பதினைந்து தமிழர் சுட்டுக்கொலை

(திருமலை)
திருமலை கட்டைபறிச்சான் இராணுவத்தினர் பல பகுதிகளைச் சுற்றி வளைத்து 12 தமிழர்களைச் சுட்டுக் கொலை செய்துள்ளனர். வவுனியாவில் 3 பொதுமக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.
9 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன
இச்சம்பவம் நடந்த வியாழக்கிழமை திருமலையில் இடம்பெற்றுள்ளது. கொல்லப்

(4-ம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதி மக்களுக்கு உதவுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
தீவுப்பகுதி மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து வருவதால் சகல பகுதிகளிலும் செயல்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உடனடியாகத் தீவுப்பகுதி மக்கள் வந்து சேர்கின்ற பண்ணை அராலித்துறையை அண்டிய பகுதிகளில் முகாம்களை அமைத்து உடனடி நிவாரண ஒழுங்குகளைச் செய்யும்படி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணை

[4ம் பக்கம் பார்க்க]

## இலங்கை பிரச்னைக்கு விரைவில் தீர்வு?

[வன்கூவர்]
இலங்கைப் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காணப்படுமென்று பிரதமர் திரு. டி.பி. விஜயதுங்க கனடா-வன்கூவர் நகரில் தெரிவித்துள்ளார்.
பிரச்சனையைதீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
இலங்கையின் பொருளா

(4-ம் பக்கம் பார்க்க)

## இரு படையினர் பலி

(திருமலை)
திருமலை வில்கம் 10ம் கட்டையடியில் படையினர்மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர். 5 படையினர் படுகாயமடைந்தனர்.

## புலிகள் சுட்டதில் 2 'புளொட்' பலி

(வவுனியா)
வவுனியா தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியில் நின்ற 'புளொட்' உறுப்பினர்கள் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்.
நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மேலும் இரு புளொட் உறுப்பினர்கள் படுகாயமடைந்தனர்.
இத்தடை முகாமில் இதுவரை புலிகளின் தாக்குதலில் 14 புளொட் உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனராம். [சி

## தாக்குதல் நிறுத்தமென கூறி பாரிய இராணுவ நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
வடக்கு-கிழக்கில் க. பொ. த. (உயர்தர) பரீட்சையின் போது இராணுவம் பெரும்பாலும் தாக்குதலை நிறுத்துமென அறிவித்த அரசு, தற்போது பாரிய இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.
காரைநகர்' ஊர்காவற்துறை, காங்கேசன்துறை, பலாலி, வவுனியா, ஆனையிறவு மன்னார், திருமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் கடும் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.
சில பகுதிகளில் மோசமான விமான, பீரங்கி, ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுவருகின்றன. மேலும் பரீட்சை

(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் விஷேட பரீட்சைக்கு மாணவர்கள் செல்லவில்லை

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணத்தில் பல பகுதியிலும் க. பொ. த (உயர்தர) பரீட்சைக்கு மாணவர்கள் எவரும் செல்லவில்லையென தெரிவிக்கப்படுகிறது.
இப்பகுதியில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சிய மாணவர்கள் இப்பரீட்சைக்கு செல்லவில்லை.
இதேவேளை வடபகுதியில் இடம்பெற்றுவரும் பாரிய இராணுவ நடவடிக்கையால் யாழ். மாவட்டத்திலும் உயர்தர பரீட்சைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக 'இந்திய வானொலி' தெரிவித்தது. (சி)

## தேர்தல் பிரசாரத்தில் 'பிரேமா' புதிய உத்தி

[கொழும்பு]
உள்ளூராட்சி சபை தேர்தலில் தீவிர முயற்சியில் ஜனாதிபதி இனப்பிரச்சனையை சாதகமாக பயன்படுத்திவருகிறார்.
விரைவில் உள்நாட்டுப் போருக்கு முடிவு காணப்படுமென்றும், பிரச்னையைத் தீர்க்க அரசு முழுமூச்சாக முனைவதாகவும் கூறி வாக்குகளைத் திரட்ட முயன்றுவருகி

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை நிறுத்தி பேச்சு நடாத்துக

[புதுடில்லி]
இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர இருதரப்பும் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கவேண்டுமென 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தெரிவித்துள்ளது.
ஜனாதிபதி பிரேமதாஸா புலிகளுடன் பேச தயார் என கூறியுள்ளார். அவரது அழைப்புக்கு புலிகளின் பதில் இதுவரை கிடைக்கவில்லையெனி

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சுத்தமான வேப்பெண்ணெய் மருந்துத் தேவைக்கு உகந்தது. பூச்சியை ஒழிக்க உதவுவது அரைப் போத்தல் ரூ. 45/- மட்டுமே, (போத்தலுடன்) மொத்தக் கொள்வனவுக்கு விசேட கழிவு: மில்க்வைற் - யாழ்ப்பாணம்.
(எ-1250)

### மணமக்கள்

எம்மிடம் மணமக்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள்: தொடர்பு: "மங்கள ஏஜென்சி" கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.
(சி-4686)

### தரன் படப்பிடிப்பாளர்

கலர் - கறுப்பு வெள்ளைப் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் வேலை, விளம்பர போட், புளொக் டிசைன் மற்றும் ஓவிய வேலைகள். தரன் படப்பிடிப்பாளர், 87, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(இ 4673)

### தாதி பயிலுநர்

தாதி பயிலுநர் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். திருமதி J: சொர்ணலிங்கம், மெடிக்கல் கிளினிக், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
(இ 4684)

### சோபிதா புத்தகசாலை

உங்கள் குழந்தைகளின் பாடநூல்களையும், அப்பியாசக் கொப்பிகளையும், பாடசாலை உபகரணங்களையும், கதை, கட்டுரை, கவிதை நூல்களையும் விருப்பம்போல் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்: சோபிதா புத்தகசாலை, 363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(எ-4669)

### பாலர் பாடசாலை

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு தர்க்கை அம்மன் வீதியிலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாமில் திருமலை தொடர்பகத்தின் ஏற்பாட்டில் நூலகம், பாலர் பாடசாலை போன்றன அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

## University of Jaffna

Applications will be received by me for the following post from suitable candidates upto 1991-05-08.

**TEMPORARY DEMONSTRATOR IN COMMUNITY MEDICINE**

Note; If there are no suitable applications with MBBS Degree, applications from A. M. O's will be considered.

SALARY SCALE:

Temporary Demonstrator with MBBS Degree - Rs. 3,250/-

Temporary Demonstrator, A. M. O's - Rs. 2,300/-

Applications should made on the forms available from the office of the Senior Assistant Registrar/Establishments of this University.

Request for application forms should be accompanied by a self addressed stamped envelope of 23 x 10 c. m in size.

Applications from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of such Institutions.

REGISTRAR.

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1991-04-25 (A-1253)

## இன்று சித்திரைக்கஞ்சி

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்தி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று சித்திரைக்கஞ்சி வைபமும், புராணப்படிப்பும் இடம்பெறவுள்ளது. (144)

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு ஆதியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் இன்று விசேட அபிஷேக பூசை ஆராதனைகளும், புராணப்படிப்பும் சித்திரைக் கஞ்சி நிகழ்ச்சியும் இடம்பெறும். (154)

## தமிழ் மன்றம்

[யாழ்ப்பாணம்]

இருபாலை தமிழ் மா மன்றத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நடப்பு வருட நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: க. ஜீவமோகன், பொதுச் செயலாளர்: சி. ஞானராசா, நிதிச் செயலாளர்: இ. பசுபதீஸ்வரன்.

மற்றும் செயலவை உறுப்பினர்களாக பன்னிரண்டு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் 7-வது ஆண்டு நிர்வாகசபை உறுப்பினர்கள் விபரம் வருமாறு:

தலைவர்: திருமதி ஜானகி இராசேந்திரம், உப-தலைவர்கள்: திருமதி கனகமணி தங்கத்துரை, திருமதி சகிலா செல்வராசா, செயலாளர்: செல்வி மாலினி கின்னப்பு, உப-செயலாளர்: செல்வி ஜெனிதாமதி சுப்பிரமணியம், பொருளாளர்: திருமதி ஜிந்தா துரைசிங்கம்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக ஏழுபேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## இராசி பலன்

**28-04-1991**

**ஞாயிற்றுக்கிழமை**

பூரணை பி. இ. 2-47 வரை. சித்திரை நண்பகல் 12-05 வரை.

இராகுகாலம் மாலை 4-28 முதல் 5-58 வரை.

சுபநேரம் காலை 8-58 முதல் 10-28 வரை. சித்திரகுப்த விரதம்.

மேஷம்: பெரியோர் ஆசி, பொருள்வரவு, தானதர்மம்,

இடபம்: எதிர்பாராத உதவி, கருத்துமோதல், மனமகிழ்ச்சி.

மிதுனம்: ஏமாற்றப்படல், குடும்பபிரிவு, தொழில்உறவு

கடகம்: தடுமாற்றம், வாக்குக் கலகம், விரக்திநிலை

சிங்கம்: தொழில் இக்கல் கடல்தொல்லை, அலைச்சல்.

கன்னி: பிறர் பகை, காரிய தாமதம், பணி [illegible] துன்பம்.

துலாம்: பெரியோர் பகை, பொதுப்பணி, தொழில் லாபம்.

விருச்சிகம்: காரியதடை, வைத்திய செலவு, பயணம்.

தனுசு: இனசன உறவு, புதிய சிந்தனை, மனநிம்மதி,

மகரம்: பணவரவு குடும்ப மகிழ்ச்சி, தொழில்பாராட்டு

கும்பம்: குடும்ப உறவில் விரிசல், பணக்கஷ்டம், அகால போசனம்.

மீனம்: தொழில் பகை, வேண்டாத உறவு, குடும்ப கவலை.

- ஜோஸ்யர்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்,

1. உடலமைப்பியல் பேராசிரியர்.
2. நோயியல் பேராசிரியர்.
3. மருத்துவப் பேராசிரியர்.
4. உளநோயியல் பேராசிரியர்.
5. குழந்தை மருத்துவப் பேராசிரியர்.
6. அங்கக்கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத் தவிசு,
7. கழலையியலில் அறக்கொடைத்தவிசு.
8. உடற்றொழியியல் / சமூகமருத்துவம் / நோயியல் / சட்ட மருத்துவம் / மருத்துவம் / உளநோயியல் / மகப்பேற்றியலும் மாதர் நோயியலும் / அறுவை மருத்துவம் / குழந்தை மருத்துவம் / உடலமைப்பியல் / மருந்தியல் / நுண்ணுயிரியல் விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II.
9. உடற்றொழிலியல் / சமூக மருத்துவம் / நோயியல் / சட்ட மருத்துவம் / மருத்துவம் / உளநோயியல் / மகப்பேற்றியலும் மாதர் நோயியலும் / அறுவை மருத்துவம் / குழந்தை மருத்துவம் / உடலமைப்பியல் / மருந்தியல் / நுண்ணுயிரியலில் தற்காலிக விரிவுரையாளர்.
10. கிளினிக்கல் மனோதத்துவ நிபுணர்.

சம்பள அளவுத் திட்டம்

| | |
|---|---|
| பேராசிரியர் தரம் II | ரூபா 12,200—6X300-14,000/- மாதமொன்றுக்கு. |
| சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் | ரூபா 8,000-5X250—9,250/- மாதமொன்றுக்கு. |
| விரிவுரையாளர் (மருத்துவம்) | ரூபா 4,500-10X200-6,500/- மாதமொன்றுக்கு. (மருத்துவபீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின்போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் இரண்டு படிகள் அதிகமாக உள்ள சம்பளத்தில் அதாவது 4,900/-ரூபா சம்பளத்தில் வைக்கப்படுதல்வேண்டும்.) |
| தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II (மருத்துவம்) | ரூபா 8000/- (நிலையானது) |
| தற்காலிக விரிவுரையாளர் தரம் II (மருத்துவம்) | ரூ. 4,500/- (நிலையானது) |
| தற்காலிக உதவி விரிவுரையாளர் தரம் II | ரூபா 3900/- (நிலையானது) ஓராண்டுக்கு: |
| கிளினிக்கல் மனோதத்துவ நிபுணர் | ரூபா 3900/- (நிலையானது) ஓராண்டிற்கு: (ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவுசெய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4,500—10X200-6500/- சம்பள அளவுத் திட்டத்தில் 4,500/- சம்பளப் படியில் வைப்பார்.) |

பேராசிரியர்களுக்கும் அறக்கொடைத்தவிசுக்களுக்கும் விண்ணப்ப முடிவு தேதி 1991-07-12 ஆகும். ஏனையோருக்கு முடிவுத் தேதி 1991-06-03 ஆகும்.

விண்ணப்பங்கள் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் செயல்படல்வேண்டும். பேராசிரியர் பதவிக்கும், அறக்கொடைத்தவிசுப் பதவிக்கும் விண்ணப்ப படிவத்திற்கான வேண்டுகோளுடன் 23X10 ச. மீட்டர் அளவுடைய, சுய முகவரியிட்டு இரண்டு ரூபா முத்திரையொட்டப்பெற்ற கடித உறையும், ஏனைய பதவிகளுக்கு 13X10 ச. மீட்டர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற கடித உறையும் இணைக்கப்படல்வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.


தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு:- பேராசிரியர் அறக்கொடைத் தவிசு ஆகிய பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
1991-04-12. (ஏ 1254)

## 11thDeath Anniversary



**Luther James Selvarajah**

"Oh, for the touch of a vanished hand
The Sound of a voice that is still"

Fondly remembered by

Wife - Ranee
and
Children - Dushan
Janey

57, Arasady Rd,
Jaffna. (C-4683)

# 30,000 வேட்பாளர்கள் நியமனப் பத்திரம் தாக்கல்

(புதுடில்லி)

இந்திய லோக்சபா தேர்தலில் இம்முறை 30,000 வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல்செய்யப்படுவது நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது. நேற்று இப்பத்திரங்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டன. இறுதி முடிவு இன்று அறிவிக்கப்படும்.

நாடெங்கிலும் தேர்தல் பிரசாரம் வெகு மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாடே தேர்தல் போட்டியில் மூழ்கிவிட்டதாக நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று திரும்பிய பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தலையொட்டி இராணுவம் பல மாநிலங்களிலும் உஷார்படுத்தப்பட்டுள்ளது. (இ)

# ஈராக் மக்கள் இராணுவம் விரைவில் கலைக்கப்படும்!

(பக்தாத்)

பத்து லட்சம் துருப்புக்களைக் கொண்ட ஈராக்கின் மக்கள் இராணுவம் எனப்படும் அமைப்பைக் கலைப்பதற்கு அதிபர் சதாம்குசைன் முடிவுசெய்துள்ளார்.

1980ம் ஆண்டு ஈரான்—ஈராக்கிய போரின்போது இந்த இராணுவ அமைப்பு உருவாக்கப்பட்டது.

நேற்றுமுன் தினம் கூடிய ஈராக்கின் ஆளும் புரட்சி தலைமை சபையில் இம் முடிவு எடுக்கப்பட்டதாக ஈராக் செய்தி நிறுவனம் தெரிவித்தது. (நி)

# பற்றீஸியன் தொழிற்பயிற்சி நிறுவனம்

# Patrician Institutes

## அகில உலக கெயார் மரவேலை, கட்டுவேலை பயிற்சி நெறிகள்

அகில உலக கெயார் ஸ்தாபனத்துடன் (Care International) இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| பயிற்சி தகமை: | 15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்<br>8-ம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட தராதரமும் |
| பயிற்சிக் காலம்: | 2½ மாதம் ஸ்தாபன பயிற்சி<br>10 மாதம் பயிலுனர் வேலையாளர் பயிற்சி |
| கொடுப்பனவு: | ஸ்தாபன பயிற்சியின் போது மாதம் 600/-ம் 10 மாத பயிலுனர் பயிற்சியின்போது வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும். அத்துடன் இலவச உபகரணப் பொதியும் வழங்கப்படும். |
| சான்றிதழ்: | பயிற்சி நிலைய பயிற்சி சான்றிதழ், தொழில் பரீட்சை அடிப்படையில் தேசிய [அரசாங்க] தொழில் சான்றிதழ், சர்வதேச ரீதியிலான கெயார் ஸ்தாபன சான்றிதழ்; |
| இதர உதவிகள்: | பயிற்சி முடிந்தவர்களுக்கு சொந்தத்தில் முயற்சிகளை தொடங்க கெயார் ஸ்தாபனத்தின் மூலம் வழி வகைகள் செய்து கொடுக்கப்படும், |
| விண்ணப்பங்கள்: | பதிவாளர், பற்றீஸியன் தொழிற் பயிற்சி நிறுவனம் 59, சென். பற்றிக்ஸ் வீதி. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 11-05-91-க்குப் பிந்தாமல் நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## ஏனைய பயிற்சி நெறிகள்

1 Computer Programing in Basic Language & Disk operating system.
2 Computer word Processing (word star 4000)
3 City and Guilds of London Institute "Quantity Surveying"
4 DraughtsmanShip - கட்டிடப் படம் வரைதல்.
5. Short hand and typing - தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்.
6 Electrical Wiring - மின்சார இணைப்பு.
7. Motor Mechanism - மோட்டார் மெக்கானிசம்.
8 Motor Winding - மோட்டார் வைண்டிங்;
9. General Electrician - எலக்ரீஸியன்.

மேற்படி பயிற்சி நெறிகள் எதிர்வரும் 15-05-91 ஆரம்பமாகும்.

மேலதிக விபரங்கட்கு:

Registrar
Patrician Institute of
Higher Studies

## வாகன தகுதி சான்றிதழ் புதுப்பித்தல்

**Fitness Certificate for Motor Vehicle - 1991**

1991-ம் ஆண்டுக்கான மோட்டார் வாகன தகுதிசான்றிதழ் திரு: A. S. குணசீலன் Automobile Engineer) அவர்களால் எமது தாபனத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

REGISTRAR

59, St, Patricks Road, Jaffna. Patrician Industrial Institute.

(A-1252)

# வியட்நாமுக்கு அமெரிக்கா 10 லட்சம் டாலர் உதவி

(வாஷிங்டன்)

செயற்கை மனித உறுப்புக்கள் பொருத்துவதற்காக அமெரிக்கா வியட்னாமுக்கு 10 லட்சம் டொலர் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

வியட்னாம்-அமெரிக்க யுத்தத்திற்குப் பின் முதல் தடவையாக இந்நிதியுதவி வழங்கப்படுவதாக அமெரிக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இரு தரப்பிலும் சுமுகமான புரிந்துணர்வு நிலையோ அல்லது பரஸ்பர கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்படும் நிலையோ இன்னும் ஏற்படவில்லை என்றும் அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (க)

# தமிழக தேர்தலில் தமிழ் போராளிகளின் தலையீடு இருக்கும்

(சென்னை)

"தமிழகத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ்ப் போராளிகளின் தலையீடு இருக்கும் சாத்தியக்கூறுகள் உண்டு. இதற்கேற்ப தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்"

சென்னையில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசுகையில் பாரதீய ஜனதா கட்சித் துணைத் தலைவர் திரு. ஜனா கிருஷ்ணமூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்பு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில், சில மாநிலங்களில் தேர்தல் பிரசாரங்களில் இலங்கை தமிழ்ப் போராளிக் குழுக்கள் வெளிப்படையாகவே ஈடுபட்டார்கள் என்றும், இவற்றை மத்திய, மாநில அரசுகள் கவனத்திற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (க)

# அகதி முகாம் அமைக்க சவூதி அரேபியா முயற்சி

[றியாத்]

ஈராக்கின் தென்பிரதேச அகதிகளுக்கான முகாம்களை அமைத்துக்கொடுக்க சவூதி அரேபியா முன்வந்துள்ளது.

ஈராக்குக்கும் குவைத்துக்கும் உள்ள எல்லையில் ஐரோப்பிய நாடுகள் அமைதிப் படையின் கண்காணிப்பிலுள்ள பிரதேசத்தில் இந்த முகாம்களை அமைக்கவும் அகதிகளைப் பராமரிக்கவும் சவூதி அரேபியா முன்வந்துள்ளது.

இந்த முகாம்களில் சுமார் 8 000 பேர்வரை தங்கலாம். இன்னும் 2 வாரகாலத்தில் இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுவிடுமென்று தெரிவிக்கப்படுகிறது.

# தீவுப்பகுதி நோக்கி கடும் ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை, காரைநகர் இராணுவ முகாம்களில் இருந்த சிறிலங்காப் படையினர் தீவுப்பகுதிகளை நோக்கி கடும் ஷெல் வீச்சுக்களை நடத்திவருகின்றனர்.

புளியங்கூடல், வேலணை கிழக்கு, நாரந்தனைப் பகுதிகளில் அதிகமான ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் பல வீடுகள் சேதமடைந்தன.

கடந்த மூன்று நாட்களாக மேற்படி ஷெல் தாக்குதல் தொடர்ந்து இடம்பெற்றுவருகிறது (56)

# கப்டன் ரஹீம் நினைவு உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கப்டன் ரஹீம் நினைவுக்கேடய 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பும் இன்று மாலை அராலி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அராலி பாரதி விளையாட்டுக்கழகம் கடந்த ஒரு வாரமாக இச் சுற்றுப்போட்டியை நடாத்தி வந்தது. இன்றைய நிறைவு நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதிப் போட்டியில் காரை விளையாட்டு கழகமும் தோப்புக்காடு விளையாட்டு கழகமும் பங்குபற்றுகின்றன. கண்காட்சி ஆட்டமொன்றும் இடம்பெறும். (சி)

# மினிபஸ் உரிமையாளர் முன்மாதிரி

(பருத்தித்துறை)

வவுனியாவுக்கும் சங்குப்பிட்டிக்குமிடையில் மினிவானில் பெண்மணி ஒருவரால் தவறவிடப்பட்ட பணம் மற்றும் முக்கிய தஸ்தாவேஜுடன் அடங்கிய பிரயாணப்பையை மினிவான் உரிமையாளரால் மூன்று நாட்களின்பின் பெண்மணியிடம் ஒப்படைக்கப்பட்டது.

நெல்லியடியைச் சேர்ந்த திருமதி தங்கவேலாயுதம் கதிராசிப்பிள்ளை என்பவர் கொழும்பிலிருந்து நெல்லியடிக்கு வந்துகொண்டிருந்தபோதே மினிவானில் இம் முக்கிய பிரயாணப்பையை இழந்தார்

மூன்று நாட்களின் பின் மானிப்பாயில் வசிக்கும் பூகொட்டேஸ் நிறுவன உரிமையாளர் திரு, என். ஈஸ்வரன் என்பவர் தமது மினிபஸ்ஸில் இப்பொருட்களை கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்தார். (52)

★ காரைநகரிலிருந்து

# 35,000க்கும் அதிகமானோர் அகதிகளாக வெளியேற்றம்

[யாழ்ப்பாணம்]

காரைநகரில் கடந்த 25-ம் திகதி இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையையடுத்து சுமார் 35,000 மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

அகதிகளாக வெளியேறிய இவர்கள் உடமைகளை இழந்த நிலையில் வந்துள்ளதால் நிவாரணம் பெறுவதற்கான பங்கீட்டு அட்டைகளையும் எடுத்துவரவில்லை.

சுமார் 6,000 குடும்பங்களை சேர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

# உதைபந்தாட்ட வீரர் மரடோனா கைது!

[புவனஸ் அயர்ஸ்]

உலகின் பிரபல உதைபந்தாட்ட வீரர் டிக்மரடோனா ஆர்ஜன்டீனா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதிக சக்திவாய்ந்த 'கொக்கெயின்' போதைப்பொருளை வைத்திருந்தாக இவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

அண்மையில் இவர் போதை வஸ்து பாவித்து போட்டியொன்றில் கலந்து கொண்டதையடுத்து அடுத்து 2 வருடங்கள் சர்வதேச போட்டிகளிலிருந்து விலக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (சி)

# ஆசிரியர் பதவி உயர்விற்கு புதிய திட்டம் அறிமுகம்!

(கொழும்பு)

ஆசிரியர் பதவி உயர்விற்கு புதிய திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

உதவி ஆசிரியர்களாக பதவியில் சேர்ந்து உதவி ஆசிரியர்களாகவே நீண்டகால சேவையில் ஓய்வுபெறும் இன்றைய ஆசிரிய பதவி நடைமுறைகளை மாற்றியமைக்கும் புதிய திட்டமொன்றை கல்வி அமைச்சு விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலிமேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட சி. ச. கூ. ச. சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மு. பகல் 9-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலையில் நடைபெறும்.

## தீவுப்பகுதி மக்களுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யம் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது.

இருப்பிடவசதி இல்லாத மக்கள் கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் தொடர்பு கொண்டு தங்களுக்கான முகாம்களுக்குச் செல்லமுடியும்.

பொதுமக்களும், சமூக அமைப்புகளும் அனுதாரவாக உள்ள மக்களுக்கு வழிகாட்டும்படியும் மேற்படி பணிக்கு ஒத்துழைக்கும்படியும் கோரப்பட்டுள்ளனர்.

# 15 தமிழ் பெண்கள் படையினரால் கைது

[வவுனியா]

வவுனியா தாண்டிக்குளம் தடைமுகாமில் 15தமிழ்பெண்கள் பெண் இராணுவத்தினரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பெண்களே பெண் இராணுவத்தால் பலத்த துன்புறுத்தல்களுக்குட்படுத்தப்பட்ட பின் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை இராணுவமும் புளொட்டும் ஆண் பயணிகளை மோசமாக தாக்கியதுடன் பொருட்களையும் பறிமுதல் செய்தனர். [பூ-சி]

## சமூகம் தரவும்

[யாழ்ப்பாணம்]

இடம் பெயர்ந்த ஊர்காவற்றுறை வேலணை, புங்குடுதீவு பல. நோ. கூ. சங்கங்களின் இயக்குநர்கள், பணியாளர்கள் அனைவரையும் இன்று ஞாயிறு காலை 9-00 மணிக்கு யாழ். பல. நோ. கூ. சங்க தலைமைக்காரியாலயத்திற்கு வருகை தருமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளார்கள்.

## தீவுப்பகுதி

1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிருந்தனர்.

இதேவேளை ஊர்காவற்றுறையிலிருந்து படையினர் தொடர்ச்சியாக கடும் ஷெல் தாக்குதலை வேலணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான் நோக்கி மேற்கொண்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

பலாலியிலிருந்து தீவுப் பகுதி நோக்கி நேற்று காலை 5 ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

தற்போது தீவுப்பகுதியில் ஒரு சில விடுகளைத் தவிர ஏனைய மக்கள் முற்றாக அங்கிருந்து வெளியேறிவிட்டனர். நேற்று யாழ்ப்பாணத்தை நோக்கி பண்ணைப் பாலம் ஊடாக சுமார் 40 000 மக்கள் காலைமுதல் நள்ளிரவு வரை வந்தவண்ணமிருந்தனர். [66-சி]

# 15 லட்சம் படையினர் கடமையில் ஈடுபடுவர்

(புதுடில்லி)

இந்தியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேர்தல் கடமையில் 15 லட்சம் படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தலின் போது வன்முறைகள் ஏற்படுவதை தடுக்கவே இவர்கள் தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்பேசம்பந்தப்பட்ட இடங்களுக்கு அனுப்பப்படவுள்ளனராம்

இதற் படையினருக்கான விஷேட பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகிறது. (சி)

## மிதிவெடியில் சிக்கிக் காயம்

(யாழ்ப்பணம்)

மடு அகதி முகாமிலிருந்து தமது சொந்தஊரான நாணுட்டான் புதுவெளிக்கிராமத்துக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞரொருவர் மிதிவெடியில் அகப்பட்டுக் காலில் படுகாயமுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாணுட்டான் புதுவெளிக் கிராமத்தைச் சேர்ந்த சவரிமுத்து ரஞ்சன் (24-வயது) என்பவரே மிதிவெடியில் சிக்கிக்கொண்டவராவார். [56]

# தலையில்லாத 4 முண்டங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமிழ்க் கிராமங்களான இருதயபுரம், பட்டிருப்புப் பகுதிகளில் மனித தலைகள் துண்டிக்கப்பட்ட 4 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி இருகிராமங்களிலும் தலா இரு மனித தலையற்ற முண்டங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த இரு தினங்களுக்கு முன்பும் ஊறணிச் சந்தியில் இரு தமிழரின் சடலங்கள் தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதும் தெரிந்ததே.

## அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்திருந்தால் அவர்கள் இன்று யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்திற்கு சமூகமளிக்குமாறு பொதுமுகாமையாளர் திரு. ஜெயராசா கேட்டுள்ளார். (152)

## தேர்தல் பிர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருர்.

இதேவேளை ஜனாதிபதியின் இந்தமுயற்சிக்கெதிராகஎதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. (சி)

## ராஜீவை எதிர்த்து போட்டி

(புதுடில்லி)

பாரதத்தேர்தலில் இ காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு ராஜீவ் காந்தி போட்டியிடும் அமேதி தொகுதியில் ஜனாப் மொகமட் நபினை ஜனதாதள் கட்சி சார்பில் போட்டியிடுகிறார். (பூ)

## இரு தமிழர் கைது

(திருகோணமலை)

கடந்த 25-ம் திகதி 58-ம் கிராமம் என்னுமிடத்திலுள்ள தோப்பூரில ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 2 பொதுமக்களைக் கைதுசெய்து சென்றனர். அவர்களுக்கு என்ன நடந்ததென்பது தெரியவில்லை.

# புலி எனக் கூறி இளம்பெண் கைது

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் தாண்டிக்குளத்திலுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஒரு பெண்ணை விடுதலைப்புலிகள் எனக்கூறி அவர்களது காவலரணில் கட்டிவைத்து துன்புறுத்தியுள்ளனர்.

மேலும் 73 வயதுடைய வயோதிபரான கார்த்திகேசு சுந்தரமூர்த்தி என்ற பொதுமகனை அடித்துத் துன்புறுத்தியுள்ளனர்.

இச்சம்பவங்கள் கடந்த 25ம் திகதி காலை 10 மணியளவில் இடம்பெற்றன. (பூ)

## யுத்தத்தை

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் -

இரு தரப்பும் விட்டுக் கொடுத்து பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ்' தெரிவித்துள்ளது (சி)

## இலங்கை பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார நிலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் இதனை மேம்படுத்த உலக நாடுகள் உதவவேண்டுமென்றும் அங்கு அவர் கோரினார். (சி)

## விற்பனையாகிறது

சுற்குநிலைத்தாதிகள் பயிற்சிக்கான போட்டிப்பரீட்சைக்குரிய படிவம் வெளிவந்து விற்பனையாகின்றது. மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். [எ 1157]

## பதினைந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட தமிழர்களது சடலங்கள் ரயர் போட்டு எரிக்கப்பட்டது. 3 தமிழர் அடித்துப் படு காயப்படுத்தப்பட்டனர்

இதேவேளை நேற்றுக்காலை வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் பொதுமக்கள் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் கொல்லப்பட்டனர்.

## லொறி தீக்கிரை

வடபகுதி நோக்கி உணவுப் பொருட்களுடன் வந்த செஞ்சிலுவைச் சங்க லொறியும் படையினரால் தீவைத்துக் கொளுத்தப்பட்டுமுள்ளது (பூ-சி)

## தாக்குதல்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நடைபெறும் பகுதிகளிலும் விமான, ஹெலி, ஷெல் அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இதனால் மாணவர்கள் பெருமளவில் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ளனர். (சி)

## புளியங்கூடலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீதியாலும், சின்னமூளாய் வடக்கு வீதியாலும் முன்னேறி புளியங்கூடல் சந்திவரை வந்தனர்.

இந்த நேரம் ஊர்காவற்றுறை முகாமிருந்து பல பகுதிகளையும் நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. ஹெலியிலிருந்தும் கலிபர் தாக்குதல் நடாத்தப்பட்டது (பூ)

## அகதியாக

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

வசித்துவந்த குமார் தற்பரானந்தம் (45-வயது) என்பவரே அதிர்ச்சியினால் மரணமானார். (56)

# காவலூர் ஷெல் வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

ஊர்காற்றுறையிலிருந்து பல திசைகளில் படையினரால் ஏவப்பட்ட கடும் ஷெல் தாக்குதலில் சிலர் இறந்திருக்கலாமென்றும் பலர் காயமடைந்துள்ளனரென்றும் அங்கிருந்து வந்தோர் தெரிவிக்கின்றனர்

ஒரு ஷெல் சாட்டிமாதா கோயிலில் தஞ்சம் புகுந்திருந்த அகதிமுகாமுக்கருகில் வீழ்ந்து வெடித்ததில் ஒருவர் பலியானார். பலர் படுகாயமடைந்தனர்.

சரவணையைச் சேர்ந்த கதிர்காமு [75-வயது] இறந்தவராவார். திருமதி ஏகாம்பிரை கனகலிங்கம் [வயது-30] யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சரவணை சின்னமடுவில் ஷெல் வீழ்ந்த வெடித்ததில் கே. சரஸ்வதி [வயது - 52] என்ற பெண் படுகாயமடைந்தார். இச்சம்பவங்கள் நேற்றுக்காலை 9 மணிக்கு இடம்பெற்றுள்ளன. அங்கு தொடர்ச்சியாக கடும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றுவருகிறது. [56]

## பல முனைகளிலும்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை தீவுப்பகுதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து யாழ்ப்பாணம் நோக்கி முன்னேறவும் படையினர் முயற்சித்து வருவதாக படை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக வெளிநாட்டு செய்தி ஒன்று தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regesteted as a News Paper at the General Post office
Lankaunder Licence numper B/100306/81.